பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 04 புதன்கிழமை 20.07.2022 கதிர் 146

## 27 ஆம் திகதி வரை சபை ஒத்திவைப்பு

நாடாளுமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்புக்காக இன்று நாடாளுமன்றம் கூடியது.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமங்க நாடாளுமன்றத்தில் ☞2

# ரணில் பெரும் வெற்றி

## மண்கவ்வினார் டலஸ்



இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியுள்ளார்.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக, நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம், புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார். ☞2

## நிறைவேற்று ஜனாதிபதியாக நாளை பதவியேற்கிறார் ரணில்

இலங்கையின் புதிய நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நாளை காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பதவியேற்கவுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற புதிய ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளைப் பெற்று வெற்றி யடைந்தார்.

இந்நிலையில், இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அவர் நாளை பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார்.

## கூட்டமைப்பின் தவறுக்கு பொறுப்புக்கூற வேண்டும்

### இது வரலாற்றுத் தவறு என்று தவராசா சாடல்



நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பொதுவாக இதுதான் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தேர்வு செய்யப்பட்டமை ஆச்சரியமானதல்ல. ஆனால், இந்த முக்கியமான தருணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாற்றுத் தவறை மீண்டும் செய்துள்ளது.

- இவ்வாறு இலங்கைத் ☞2

## மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை

### இப்படிக் கூறுகின்றார் அநுரகுமார



நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நாடாளுமன்றம் நிறைவேற்றவில்லை. அதனை இந்த நாடாளுமன்றம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கவும் இல்லை.

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்றது.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் மூவரும் கருத்துக்களை முன்வைத்தனர். அவ்வேளையிலேயே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு ☞2

## தினேஷுக்குப் பிரதமர் பதவி?



புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்ககடமையேற்ற பின்னர், தினேஷ் குணவர்தன பிரதமராக நியமிக்கப்படவுள்ளார்.

அத்துடன், சர்வகட்சி அரசுக்கும் ரணில் அழைப்பு விடுத்துள்ளார்.

## காலிமுகத்திடலில் பண்டாரநாயக்க உருவச்சிலையை உடைக்கச் சிலர் சதி; அங்கு ஒன்றுகூடுவதற்குத் தடை!

### கொழும்பு நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு - காலிமுகத்திடலிலுள்ள பண்டாரநாயக்க உருவச்சிலையைசூழவுள்ள50மீற்றர்பிரதேசத்துக்குள் ஒன்றுகூடுவதற்கு தடைவிதித்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

கோட்டைப் பொலிஸாரின் கோரிக்கையைப் பரிசீலித்ததை அடுத்து, கோட்டை நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பண்டாரநாயக்க உருவச்சிலையைச் ☞2

## 27 ஆம் திகதி வரை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரை நிகழ்த்தியதை அடுத்து, ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிட்ட டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டோர் உரை நிகழ்த்தினர்.

இதையடுத்து சபை நடவடிக்கைகள் நிறைவடைந்தன. நாடாளுமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

## ரணில் பெரும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டலஸ் அழகப்பெரும 82 வாக்குகளையும், அநுரகுமார திஸாநாயக்க 3 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ச, கடந்த 14ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்திருந்தார். மக்கள் தன்னெழுச்சி எதிர்ப்புப் போராட்டம் காரணமாக நாட்டைவிட்டுத் தப்பியோடிய அவர், சிங்கப்பூரிலிருந்து பதவி விலகல் கடிதத்தைச் சபாநாயகருக்கு அனுப்பிவைத்திருந்தார்.

இதையடுத்துப் புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் கோரியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடக் களமிறங்கியிருந்தனர்.

இவர்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தோல்விப் பயம் காரணமாகப் போட்டிக் களத்திலிருந்து நேற்று திடீரென விலகி டலஸ் அழகப்பெருமவுக்குத் தனது கட்சியின் ஆதரவைத் தெரிவித்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவரினதும் வேட்புமனுக்களை நாடாளுமன்றம் நேற்று ஏற்றுக்கொண்டது.

இந்த மூவரில் ரணிலுக்கான ஆதரவைச் சில கட்சிகளும், டலஸுக்கான ஆதரவைச் சில கட்சிகளும் நேற்றுக் காலை முதல் இன்று காலை வரை தெரிவித்து வந்தன.

இந்நிலையில், புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. அதன்பின்னர் இரகசிய வாக்கெடுப்பு ஆரம்பமானது.

இதில் சபாநாயகர் உள்ளிட்ட 223 பேர் வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அளிக்கப்பட்ட வாக்குகளில் 4 வாக்குகள் செல்லுபடியற்றதாகின. இதன்படி செல்லுபடியான 219 வாக்குகளில் 134 என்ற அதிகப்படியான வாக்குகளைப் பெற்று இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியுள்ளார்.

1993ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மறைவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காக அப்போதைய பிரதமராகப் பதவி வகித்த டீ.பி. விஜேதுங்க நாடாளுமன்றத்தால் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில், வேறு எவரும் ஜனாதிபதிப் பதவிக்காக வேட்புமனுத் தாக்கல் செய்யாமையால், டீ.பி. விஜேதுங்க போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

இதையடுத்து, ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்படும் இரண்டாவது சந்தர்ப்பமாக இது அமைந்துள்ள போதிலும், வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது விசேட அம்சமாகும்.

## கூட்டமைப்பின் தவறுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் அக்கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்துள்ளார்.

'நடப்பு அரசியலின் யதார்த்தம் புரியாத கூட்டமைப்பின் தலைமைத்துவம் விட்டுள்ள மற்றுமொரு வரலாற்றுத் தவறு' என்ற தலைப்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு சாடியுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மக்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாஷைகளையும் பொருட்படுத்தாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் அரசியல் ரீதியில் ஒரு சிலரின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கியிருப்பது மிகவும் தெள்ளத் தெளிவானது.

இலங்கை அரசியலில் பொறுப்பு வாய்ந்த பதவியில் யார் அமரப் போகின்றார் என்பதல்ல நமது விடயம். வரப்போகும் நபருடன் நமது பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கான வழிமுறையொன்றைக் கண்டடைதல்தான் அரசியல் முதிர்ச்சி. அப்படிப்பட்ட முதிர்ச்சி கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் நடவடிக்கையில் எந்தவொரு இடத்திலும் பிரதிபலிக்கவில்லை என்பது துரதிஷ்டவசமானது. சிறுபிள்ளைக்கும் விளங்கும் நடப்பு அரசியல் யதார்த்தம், கூட்டமைப்பின் தலைமைத்துவத்தால் புரிந்துகொள்ளப்படாத அதிசயத்தை என்னவென்று சொல்வது?

எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த தமிழ்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் வாக்குகள் இப்போது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வொன்று குறித்துப் பேசமுடியாத நிலையில் வீணாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அரசியல் தலைமைத்துவம் என்பது காலத்தின் பொருத்தப்பாட்டையறிந்து, அரசியல் நடப்பைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ற நிலையில் மக்களுக்குப் பயன்தரத்தக்க நிலைப்பாட்டில் உறுதியாக நிற்பதோடு, தன்னோடு இணைந்து பயணிக்கும் அனைவரையும் அதே நிலைப்பாட்டில் உறுதியோடும் திருப்தியோடும் நிலைத்திருக்கச் செய்வதாகும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் விட்டுள்ள இந்தத் தவறு ரணிலின் ஆட்சிக்காலத்தில் இனி எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் தமிழர் தரப்பு நெஞ்சு நிமிர்த்தி நின்று எதிர்பார்க்கவும் முடியாது, கேட்கவும் முடியாது செய்துள்ளது.

தவறான மதிப்பீடு மற்றும் தவறான வழிநடத்தல்களால் தமிழ்த் தேசிய இலக்கை அடைய முடியாத நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இது தொடர்பான உபாயங்களைச் செதுக்கி தமிழர் அரசியல் இருப்பை உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.

எனவே, பொறுப்புக்களைக் கடந்து செல்லாமல், உடனடியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி நடந்த தவறுகளல்ல, தப்புக்களுக்கான காரணங்களை ஆராய்வது மட்டுமின்றி பொறுப்புக்கூற வேண்டியதும் மிகவும் இன்றியமையாதது - என்றுள்ளது.

## மக்களின் எதிர்பார்ப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் குறித்து பல தரப்புகள், கட்சிகளுடன் நாம் பேச்சுகளை நடத்தியிருந்தோம். இடைக்கால ஜனாதிபதிப் பதவிக்கு சபாநாயகரின் பெயரும், பிரதமர் பதவிக்கு சுமந்திரன் எம்.பியின் பெயரும் ஒரு யோசனையாக முன்வைக்கப்பட்டது. மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில், அந்த யோசனையை நிறைவேற்றி, சிறந்த முன்னுதாரணத்தை வழங்கியிருக்கலாம்.

ரவூப் ஹக்கீமுடனும் பேச்சு நடத்தினோம். ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளை இரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கலாம் என்ற சிறந்த யோசனையை அவர் முன்வைத்தார். அதனை நிறைவேற்றி இருந்தால் கூட நாடாளுமன்றம் மீதான கௌரவம் அதிகரித்திருக்கும்.

குறுகிய காலத்துக்கு இவ்வாறு அமையும் அரசின், கூட்டு அமைச்சரவையில் பதவிகளை ஏற்கவும் நாம் தயாராக இருந்தோம். அமைச்சரவை எண்ணிக்கை 10 ஆக வரையறுக்கப்பட்டது. எனினும், மேற்படி யோசனைகள் எல்லாம் தோற்கடிக்கப்பட்டன.

இதனால்தான் நான் வேட்பாளராகப் போட்டியிட்டேன். 3 வாக்குகள்தான் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சுயாதீன அணிகள் என்பன டலஸுக்கு ஆதரவு வழங்கப்போவதாக அறிவித்தன. எனினும், கொள்கை காப்பாற்றப்படவில்லை.

18 ஆவது திருத்தச் சட்டமூலம், 52 நாள்கள் அரசியல் சூழ்ச்சி மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் ஆகியவற்றின்போது எம்.பிக்கள் விலைபோனார்கள். தற்போதும் அது நடந்துள்ளது. இந்தக் கருத்தைச் சொல்வதால் சிலருக்கு வலிக்கலாம். எனினும், அதனை நான் மீளப்பெறபோவதில்லை.

எனவே, கூடிய விரைவில் மக்கள் ஆணையுடன் அரசொன்று அமைய இடமளிக்கப்பட வேண்டும் - என்றார்.

## காலிமுகத்திடலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேதமாக்குவதற்குச் சிலர் தயாராகுகின்றனர் என்று கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸார் இது குறித்து நீதிமன்றத்தில் விடயங்களை சமர்ப்பித்திருந்தனர்.

இதற்கமைய, பண்டாரநாயக்க உருவச்சிலையை சூழவுள்ள 50 மீற்றர் பிரதேசத்துக்குள் ஒன்றுகூடுவதற்குத் தடை விதிக்குமாறு பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை ஆராய்ந்த கொழும்பு கோட்டை நீதிவான், பொலிஸாரின் கோரிக்கைக்கு இணங்க தடை விதித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## பின்னடைவிலும் நல்ல விடயம்

இலங்கையின் நீண்ட கால அரசியல் சாணக்கியன் ரணில் விக்கிரமசிங்க கடைசியில் நாட்டின் ஜனாதிபதியாகிவிட்டார்.

பொதுத் தேர்தலில் மாவட்ட ரீதியான வாக்களிப்பில் தோற்று, தேசிய பட்டியலில் கிட்டிய ஒரேயொரு ஆசனத்தில் நாடாளுமன்றத்துக்குள் புகுந்த ரணில் விக்கிரமசிங்க, தமது அரசியல் தந்திரத்தினால் பிரதமராகி, நாட்டின் இக்கட்டான அரசியல் நெருக்கடியை வசமாகப் பயன்படுத்தி இன்று ஜனாதிபதியுமாகி விட்டார். இப்போது மக்கள் பிரதிநிதிகளால் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அவர்.

முன்னர் இரு சந்தர்ப்பங்களில் அவரை ஜனாதிபதியாக விடாமல் திட்டமிட்டு முறியடித்த தமிழர் தரப்பினால் இம்முறை அதைச் செய்ய முடியவில்லை. அதைச் செய்வதற்கு இம்முறை தமிழர் தரப்பு எடுத்த நடவடிக்கை மிக மோசமாக விமர்சிக்கப்பட்டது. குறிப்பாகத் தமிழர் தரப்புகளினாலே கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இப்பத்தியில் நாமும் விமர்சித்தோம்.

ஆனாலும் ரணிலுக்கு மாறாகத் தாங்கள் ஆதரித்த டலஸ் அழகப்பெருமா – சஜித் பிரேமதாஸ தரப்பிடமிருந்து தமிழர் தரப்பு – குறிப்பாக சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரின் தீவிர முன்முயற்சியில் – ஒப்பம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆவணம் மெச்சத்தக்கதுதான்.

ஜனாதிபதி, பிரதமர் பதவிக்கு வரக்கூடிய இருவரை நிறுத்தி வைத்து, நிபந்தனைகளை எழுத்தில் கொடுத்து, ஒப்பமிட்டு வாங்கி, இணங்கப் பண்ணிய சம்பந்தன் – சுமந்திரன் முயற்சி பாராட்டத்தக்கது.

அதுவும் வரும் செப்டம்பரில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்படும் இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இலங்கை அரசும் சேர்ந்து அனுசரணை வகிக்க வேண்டும் என்பதைக் கூட எழுத்தில் பெற்ற கூட்டமைப்புத் தரப்பை சிலாகிக்காமல் இருக்க முடியாது. எனினும் இரண்டு விடயங்கள்.

ஒன்று – வெற்றி பெற வாய்ப்புள்ளவர் என அதிகம் கருதப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த கோரிக்கைகளை – நிபந்தனைகளை – முன்வைத்து இணக்கம் பெற ஏன் முயற்சி எடுக்கப்படவில்லை?

வீட்டுக்குள் சுருண்டு கிடக்கும் சம்பந்தனுக்கு இந்த விடயம் முறையாக உறைக்கவில்லையா? யதார்த்தம் புரியவில்லையா?

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ரணிலுடன் சுமந்திரனுக்கும் தனிப்பட்ட குரோதம் இருக்கின்றது என்பதற்காக இவ்விடயத்தில் வரலாற்று தவறு இழைக்கப் பகுதியளவிலேனும் இடமளித்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் தவறும் சுட்டிக்காட்டப்பட வேண்டும். நேற்று நாடாளுமன்றத்தில் தமது கட்சி சார்பில் கோரிக்கை கடிதம் ஒன்றை ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்த போது அவர் அதற்கு சார்பாகப் பச்சைக் கொடி காட்டி இருந்தார். அப்படியானவரிடம் கூட்டமைப்பும் தன்னுடைய திட்டங்களை – நிபந்தனைக் கடிதத்தையும் அவரிடமும் சமர்ப்பித்து, அவரின் கருத்து நிலையை உள்வாங்கி ஒரு முடிவு எடுக்காமல், உதய கம்மன்பில்ல, விமல் வீரவன்ஸ, வாசுதேவ ஆகியோரை அரவணைத்த கூட்டில் போய்த் தமிழரைச் சிக்கவைத்து, தமிழ்க் கூட்டமைப்பின் தலைமை வரலாற்றுத் தவறிழைத்திருக்கின்றது.

அடுத்த விடயம், டலஸ் – சஜித் தரப்பு ஒப்பமிட்டு தந்த அந்த ஆவணம். தமிழ்க் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அது ஒரு பொக்கிஷம். அதைப் பகிரங்க ஆவணமாக்க வேண்டும். ரணிலோ, வேறு யாரோ ஆட்சி கட்டிலில் இருந்தபடி அதிலுள்ள விடயங்களை நகர்த்தும்போது எதிரணியில் இருக்கும் டலஸ் – சஜித் அணி அவற்றை எதிர்க்காமல் இருப்பதற்கு இந்த ஆவணத்தைக் கூட்டமைப்பு பயன்படுத்தலாம். அந்த வகையில் இவ்வளவு பின்னடைவுகளுக்கு மத்தியிலும் அந்த ஆவணத்தை ஒப்பமிட்டு பெற்றமைக்காக கூட்டமைப்பை பாராட்டலாம்.

# நாடாளுமன்றம் தொடர்ந்தும் பொதுஜன பெரமுன பிடியில்!

## சுமந்திரன் சுட்டிக்காட்டு



நாடாளுமன்றம் தொடர்ந்தும் பொதுஜனபெரமுனவின் பிடியில் அதனை கலைக்கவேண்டும் என தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது ருவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஆணையை இழந்த பொது ஜனபெரமுனவின் பிடியிலேயே இன்னமும் தான் உள்ளதை மீண்டும் நாடாளுமன்றம் வெளிப்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தை கலைக்கவேண்டும் என்பதை மீண்டும் தெரிவிக்கின்றேன்.

டலஸிற்கு வெளிப்படையாக ஆதரவை வெளியிட்டவர்களின் எண்ணிக்கை 113 வை விட அதிகம் அவர்களுக்கு என்ன நடந்தது என ஜே.வி.பியின் தலைவர் முக்கியமான கேள்வியொன்றை எழுப்பியுள்ளார் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

# 11 ஆயிரத்து 219 ரூபாவில் ஒருவர் ஒரு மாதம் வாழலாம்

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

தனி நபர் ஒருவர் 11 ஆயிரத்து 219 ரூபா பணத்தில் ஒரு மாதம் ஜீவிக்கலாம் என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மாவட்டங்களுக்கு அமைய தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத்திணைக்களம் இந்த ஆண்டின் மே மாதத்துக்காக வெளியிட்டுள்ள தேசிய வறுமை வரையறை விவரங்கள் மற்றும் தகவல்கள் தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், நான்கு பேரை கொண்ட ஒரு குடும்பத்துக்கு அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மாதம் 44 ஆயிரத்து 876 ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

2012 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய தேசிய மட்டத்தில் ஒரு நபருக்கு 5 ஆயிரத்து 223 ரூபா தேவைப்பட்டது என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆண்டுகளில் கொழும்பு மாவட்டத்தில் வாழும் ஒரு நபருக்கு மாதம் 5 ஆயிரத்து 429 ரூபா தேவைப்பட்டது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

## ரணிலின் பிரத்தியேக இல்லத்திற்கு தீ வைத்த சம்பவம்; முன்னாள் பிரதி அமைச்சரின் மகன் நாட்டை விட்டு தப்பி ஓட்டம்

ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லத்துக்குத் தீ வைத்த சம்பவத்தில் தேடப்பட்டு வந்த ஒருவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரின் மகனே இவ்வாறு தேடப்பட்டுவந்த நிலையில் அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என சி.ஐ.டி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முன்னாள் பிரதி அமைச்சரின் மகன் டுபாய் சென்றுள்ளார் எனக் குற்றப் புலனாய்வு திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 25 ஆயிரத்து 547 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடந்த 18 நாள்களில் மாத்திரம் நாட்டுக்கு வருகை

இந்த மாதத்தின் கடந்த 18 நாள்களில் மாத்திரம் 25 ஆயிரத்து 547 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இது கடந்த ஜூன் மற்றும் மே மாதத்தை விட சற்று அதிகமாகும் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 லட்சத்து 36 ஆயிரத்து 921 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

# வீடுடைத்துத் திருடி வந்தவர் களுவாஞ்சிக்குடியில் கைது




மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் நீண்ட நாள்களாக வீடுகளை உடைத்து பொருள்களைச் சுருட்டி வந்த 24 வயது இளைஞனை, நேற்று முன்தினம் இரவு தாங்கள் கைதுசெய்துள்ளோம் என களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். திருடப்பட்ட எரிவாயு வெற்றுச் சிலிண்டர் – 6, தங்க ஆபரணங்கள், சிடி பிளேயர், 6,500 ரூபா பணம் மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்திய ஆயுதங்கள் ஆகியவற்றை இளைஞனிடமிருந்து மீட்டுள்ளோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வரலாறு காணாத வெப்பத்தால் சுட்டெரிக்கும் ஐரோப்பா

## குடியிருப்புகளில் பரவும் காட்டுத்தீயால் மக்கள் அவதி



வரலாறுகாணாதவெப்பஅலையால்போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயினில் கடந்த 1 ஒரு வாரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். லண்டன் நகருக்குள்ளும் காட்டுத்தீ பரவி, குடியிருப்புகள் பற்றியெரிகின்றன. தெற்கு ஐரோப்பிய நாடுகள், வரலாறு காணாதகடும்வெப்பஅலையைஎதிர்கொண்டுள்ளன. இதனால் ஸ்பெயின், கிரீஸ் உள்ளிட்ட நாடுகளில் காட்டுத்தீ வேகமாக பரவிய நிலையில், லண்டன் நகரமும் அதிலிருந்து தப்பவில்லை. லண்டனின் கிழக்கு பகுதியிலுள்ள வென்னிங்டன் பகுதியில் குடியிருப்புகள் வரை காட்டுத்தீ பரவியது. சுமார் 100 ஏக்கரில் பரவிய காட்டுத் தீயில் குடியிருப்புகளும் பற்றி எரிகின்றன. தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பாலானோர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். வெப்ப அலையால் பிரிட்டன் மக்கள் இதுவரை கண்டிராத சுட்டெரிக்கும் வெயிலை எதிர்கொண்டுள்ளனர். உச்சபட்சமாக நேற்று, பிரிட்டனில் 40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. சராசரியாக 18 டிகிரி செல்சியஸ் முதல் 25 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையை எதிர்கொள்ளும் பிரிட்டனில், தற்போது 2 மடங்காக வெப்பநிலை அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் நீர்நிலைகளை நோக்கி படையெடுக்க தொடங்கியுள்ளனர்.பொதுமக்கள் நெருப்பை பயன்படுத்த வேண்டாம். உடைந்த போத்தல்கள், கண்ணாடிகளை கீழே கொட்ட வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் லண்டன் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கிரீஸ் நாட்டிலும் தலைநகர் எதென்ஸிலிருந்து 27 கி.மீ. தொலைவில் உள்ள புறநகர் பகுதி வரை காட்டுத்தீ பரவியுள்ளது. இதனால் கி.மீ. கணக்கில் வானம் புகை மூட்டமாக காட்சியளிக்கிறது. குடியிருப்புகளை காட்டுத்தீ நெருங்கி இருப்பதால், ஹெலிக்கொப்டரில் தீயை அணைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நேற்று 106 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் சுட்டெரித்தது. இதனால் பாரிஸ் நகர் பகுதிகளில் குளிரூட்டும் அறைகள் பல திறக்கப்பட்டன. இயல்பை மீறி அதிகளவு வெப்பம் சுட்டெரிப்பதால் பாரிஸில் இரவிலும் பல பூங்காக்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஈபிள் கோபுரத்தின் முன்பாக உள்ள ட்ரோகெடரோ பூங்காவின் நீரூற்றுகள் நீச்சல் குளங்களாக மாறியுள்ளன.

ஸ்பெயினின் வடமேற்கு மாகாணமான ஜெமோராவிலும் காட்டுத்தீ குடியிருப்புகளை நெருங்கி விட்டது. இங்குள்ள டபரா கிராமம், போர்த்துக்கல் எல்லையிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது. அங்கு கட்டுக்கடங்காமல் பரவிய காட்டுத்தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் கடும் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஜெமோரா மாகாணத்தில் காட்டுத்தீ பரவிய 32 கிராமங்களில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டனர். கடும் வெப்ப அலை காரணமாக ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் நாடுகளில் மட்டும் இதுவரை 1,700க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

வெப்ப அலையின் தாக்கத்தில் இருந்து ஜேர்மனியும் தப்பவில்லை. நேற்று வெப்பநிலை 100 டிகிரி பாரன்ஹீட்டாக அதிகரித்தது.

குழந்தைகளுடன் வெளியே செல்வோர் காலை நேரத்தில் சென்று வருவது நல்லது என பொதும க்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஐரோப்பிய நாடு எதிர்கொண்டுள்ள வரலாறு காணாத வெப்ப அலைக்கு காலநிலை மாற்றமே காரணம் என சூழலியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## இந்திய - சீன எல்லையில் பணியில் ஈடுபட்ட 19 தொழிலாளர்கள் ஆற்றில் மூழ்கி பலி?



இந்திய – சீன எல்லையில் சாலை பணியில் ஈடுபட்ட 19 தொழிலாளர்கள் ஆற்றில் மூழ்கி பலியாகினர் என தகவல்கள் வெளியாகி உள்ளன. அவர்களில் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அருணாச்சல பிரதேச மாநிலம் குருங்குமே மாவட்டத்தில் உள்ள இந்திய–சீன எல்லைக்கு அருகே தொழிலாளர்கள் சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் சிலர் காணாமல் போகியுள்ளனர் என கூறப்படுகிறது. அவர்களில் ஒருவரின் உடல் குமி ஆற்றில் கண்டெடுக்கப்பட்டது. அப்போதிருந்து, குமே ஆற்றில் மூழ்கி அனைத்து தொழிலாளர்களும் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், 'பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு அசாமிற்கு செல்ல விடுப்பு அளிக்குமாறு ஒப்பந்ததாரரிடம் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால், ஒப்பந்தக்காரர் அவர்களுக்கு விடுப்பு அளிக்க மறுத்துவிட்டார். அதனால், அவர்கள் அனைவரும் கட்டுமான பணிகள் நடக்கும் இடத்தில் இருந்து அசாமிற்கு நடந்தே புறப்பட்டு சென்றனர். குருங்குமே மாவட்டத்தின் அடர்ந்த காடுகளின் வழியாக சென்றுள்ளனர். ஆனால் அவர்கள் எத்தனை பேர் சென்றனர் என்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. குமே ஆற்றில் ஒரு தொழிலாளரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதால், மற்றவர்களின் கதி என்ன? என்பது தெரியவில்லை. முதற்கட்ட விசாரணையில் தங்களது சொந்த ஊருக்கு சென்ற தொழிலாளர்கள் 19 பேர் என்று கூறப்படுகிறது. ஒரு வாரமாக அவர்கள் குறித்த விவரங்கள் இல்லாதமையால், அனைத்து தொழிலாளர்களும் ஆற்றில் மூழ்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது



## பாகிஸ்தானில் கொலரா நோய்த் தொற்று 2,000 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

பாகிஸ்தானின் பலுச்சிஸ்தான் மாகாணத்தில் கொலரா தொற்று பாதிப்பால் 2,000 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தானில் கடந்த மாதம் பருவமழையால் பலுச்சிஸ்தான் மாகாணத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளப்பெருக்கில் குடியிருப்புகள், சாலை உள்ளிட்ட அடிப்படை கட்டுமானங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளாகின. மழை, வெள்ளத்தால் பல்வேறு இடங்களில் குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் கலந்தது.

இதனால் பலுச்சிஸ்தான் மாகாணத்தில் 13 மாவட்டங்களில் மக்களுக்கு வயிற்றுப்போக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

லாத், சோப் ஆகிய 2 மாகாணங்களில் கொலரா தொற்று பாதிப்பும் பரவி வருவது கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை கொலரா தொற்றிற்கு 2,000 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு இருப்பதால் அரசு மருத்துவமனைகளில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பலுச்சிஸ்தான் மாகாணத்தில் சில மாவட்டங்களில் கொலரா தொற்றிற்கு உயிரிழப்புகள் நேர்ந்து இருக்கின்றன என தெரிவித்திருக்கும் அதிகாரிகள், உலக சுகாதார மையத்திடம் கொலரா தொற்றிற்கான மருந்துகள் மற்றும் மருத்து–வர்களை அனுப்பி வைக்க உதவி கோரி இருக்கிறோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காவிரி மேலாண்மைக் கூட்டத்தில் மேகதாது பற்றி விவாதிக்கக் கூடாது



காவிரி மேலாண்மை ஆணையத்தின் 16வது கூட்டம் வருகிற 22ம் திகதி (வெள்ளிக்கிழமை) டெல்லியில் நடக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் மேகதாது அணை விவகாரம் குறித்து விவாதிக்கப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது. காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம் ஏற்கனவே 3 முறை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மீண்டும் வருகிற 22ம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் மேகதாது அணை குறித்து விவாதிக்க கூடாது என்று தமிழக அரசு தாக்கல் செய்த மனு இன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, உச்சநீதிமன்ற உத்தரவுப்படி நீர் பங்கீடு முறையாக மேற்கொள்ளவில்லை என கர்நாடகா மீது தமிழக அரசு புகார் தெரிவித்துள்ளது. தமிழகத்திற்கு முறையாக நீர் பங்கீடு அளிக்கப்படுவதாக கர்நாடக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் வாதம் நடத்தப்பட்டது. இதுபோல், உச்சநீதிமன்ற உத்தரவுப்படி நீர் பங்கீடு முறையாக மேற்கொள்ளவில்லை என கர்நாடகா மீது தமிழக அரசு புகாரளித்துள்ளது. இருதரப்பு வாதங்களை கேட்ட உச்சநீதிமன்றம், காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் மேகதாது பற்றி விவாதிக்கக் கூடாது என்று அதிரடியாக அறிவித்துள்ளது. மேகதாது விவகாரத்தில் காவிரி மேலாண்மை ஆணையத்தின் கருத்தையும் அறிய விரும்புகிறோம் என்றும், மேகதாது அணை பற்றி விவாதிக்கலாமா? கூடாதா என்பது பற்றி காவிரி மேலாண்மை ஆணையம் தெரிவிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், 2018ம் ஆண்டு முதல் மேகதாது பிரச்சினை இருக்கிறது, அதனால் காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம் ஒரு வாரம் ஒத்திவைத்தால் ஒன்றும் ஆகாது என்றும் நீதிபதி கருத்து தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலில் நடந்ததா முறைகேடு?



தேசிய ஜனநாயக கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக திரௌபதி முர்மு போட்டியிடுகிறார். ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குபதிவு கடந்த 18ம் திகதி நடைபெற்றது. கர்நாடகாவில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் முறைகேடு நடந்ததாக காங்கிரஸ் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற கட்சி தலைவர் சித்தராமையா, மாநில காங்கிரஸ் தலைவர் சிவகுமார் ஆகியோர் தேர்தல் கமிஷனில் புகார் அளித்துள்ளனர். அதில் கூறியிருப்பதாவது:-

ஜனாதிபதி தேர்தலில் பாரதிய ஜனதா கூட்டணி கட்சியின் வேட்பாளர் திரௌபதி முர்முவுக்கு ஆதரவாக வாக்களிக்க எம்.எல்.ஏக்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டு உள்ளது. மாநில பாரதிய ஜனதா நிர்வாகிகள் இதனை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் எம்.எல்.ஏக்களை பெங்களூருவுக்கு அழைத்து வந்து சொகுசு கோட்டலில் தங்க வைத்துள்ளனர். அவர்களுக்கு ஆடம்பர அறைகள் ஒதுக்கப்பட்டு மதுபானங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்கள் திரௌபதி முர்முக்கு வாக்களிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இது தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானது. இதுபோன்ற செயல்களில் ஈடுபட்ட கர்நாடக மாநில பாரதிய ஜனதா நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறியுள்ளனர்.

## தடுப்பூசி செலுத்திய அனைவருக்கும் பிரதமர் மோடி பாராட்டுக் கடிதம்

இந்தியாவில் 200 கோடி தடுப்பூசி செலுத்தி சாதனை படைக்கப்பட்டு உள்ளது. இதையொட்டி தடுப்பூசி செலுத்திய அனைவருக்கும் பிரதமர் மோடி பாராட்டு தெரிவிக்கும் விதமாக தனிப்பட்ட முறையில் பாராட்டுக் கடிதங்களை எழுதி வாழ்த்தி உள்ளார். இதனை தடுப்பூசி செலுத்தியவர்கள் கோவின் இணையதளத்துக்கு சென்று பிரதமரின் பாராட்டு கடிதத்தை பதிவிறக்கம் செய்யலாம் என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.



## ஆந்திராவில் மாவோயிஸ்டு ஆதரவாளர்களின் வீடுகளில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் திடீர் சோதனை



ஆந்திர மாநிலம் விஜயவாடா மற்றும் பிரகாசம் மாவட்டத்தில் உள்ள மாவோயிஸ்டு ஆதரவாளர்களின் வீடுகளில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர். பிரகாசம் மாவட்டம் அஜித் சிங் நகரில் உள்ள நக்சலைட் ஆதரவாளர் ஒருவரது வீட்டில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அங்கிருந்து சில டைரிகள், டிஜிற்றல் உபகரணங்கள், பேனர்கள் மற்றும் துண்டு பிரசுரங்களை அதிகாரிகள் கைப்பற்றினர். விஜயவாடாவில் உள்ள ஒரு வீட்டின் அருகே சத்தீஸ்கரைச் சேர்ந்த 4 வாலிபர்கள் தங்குவதற்கு இட வசதி அளிக்கப்பட்டது குறித்து என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரித்தனர். சத்தீஸ்கர் வாலிபர்கள் அந்த வீட்டில் எவ்வளவு நாள்கள் தங்கினர். தடை செய்யப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டனரா என பொலிஸார் விசாரித்து வருகின்றனர். சத்தீஸ்கர் வாலிபர்களை மாவோயிஸ்ட் ஆதரவாளர்கள் சந்தித்தார்களா போன்ற விவரங்களையும் அவர்கள் சேகரித்தனர். விஜயவாடாவில் ஒரு இடத்திலும், பிரகாசம் மாவட்டத்தில் 2 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. பிரகாசம் மாவட்டம் தங்குதூர் அருகே அழகுறபாடு என்ற இடத்தில் 3 வீடுகளில் சோதனை நடத்தினர். இந்த சோதனையில் முக்கிய ஆவணங்கள், டிஜிற்றல் சாதனங்கள், பேனர்கள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஒரு சில டைரிகளை கைப்பற்றினோம் என என்.ஐ.ஏ. அதிகாரிகள் தெரிவித்தனர். 2019ம் ஆண்டு சத்தீஸ்கரில் உள்ள பஸ்தார் மாவட்டத்தின் நகர்நார் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட மாவோயிஸ்டுகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த என்கவுன்ட்டர் தொடர்பான வழக்கில் ஆந்திராவின் பல இடங்களில் என்.ஐ.ஏ. சோதனை நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### ஜி.எஸ்.டி .வரி உயர்வைக் கண்டித்து

## எதிர்க்கட்சிகள் போராட்டம் நாடாளுமன்ற வளாகத்தில்

மத்திய அரசு அரிசி, தயிர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கும் ஜி.எஸ்.டி. விதித்து அறிவித்தது. தயிர், பன்னீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கான ஜி.எஸ்.டி. ஜூலை 18 முதல் பூச்சியத்தில் இருந்து 5 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இதை கண்டித்து, நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கூட்டம் மூன்றாவது நாளாக நடைபெற்று வரும் நிலையில், எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தி வருகின்றன.

பணவீக்கம் மற்றும் அன்றாடப் பயன்பாட்டுப் பொருள்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி உயர்வுக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. தயிர், ரொட்டி, பன்னீர் போன்ற பொருள்களின் மீதான ஜி.எஸ்.டி. உயர்வை திரும்பப் பெறக்கோரி, காங்கிரஸ், என்.சி.பி., தி.மு.க., இடதுசாரி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலை முன்பு நடைபெற்ற போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் காந்தி, மல்லிகார்ஜூன் கார்கே, ஆதிர் ரஞ்சன் சவுத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதையில் குடிதண்ணீர் வழங்குவதில் நெருக்கடி?

## யாத்திரிகர்கள் மத்தியில் விசன நிலை





(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காம பாத யாத்திரிகர்களுக்கு இம்முறை காட்டுப்பாதையில் குடிதண்ணீர் வழங்குவதில் சிக்கல் நிலை எதிர்நோக்கப்பட்டுள்ளதாக பரவலாகக் கூறப்படுகிறது.

அம்பாறை அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற உகந்தை மலை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் காட்டுப்பாதை வழியாக செல்லும் அடியார்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டது.

இம் முறை பல்லாயிரக்கணக்கான அடியார்கள் பாத யாத்திரையில் பயணிக்கவிருக்கின்றனர். இந்நிலையில் குடிதண்ணீர் இல்லாத செய்தி இந்துக்கள் மத்தியில் கவலை கொள்ள வைத்திருக்கின்றது.

குறிப்பாக உகந்தை ஆலயத்தில் இருந்து குமுக்கன் வரையான பிரதேசத்தில் பாணமைப்பற்று, லாகுகல பிரதேச செயலகமும் – குமுக்கன் ஆற்றில் இருந்து யால பிரதேசத்திற்கு திருக்கோயில் சிவ தொண்டர் நிலையமும் – யால ஆற்றில் இருந்து கதிர்காமம் வரை மொனராகலை செயலகமும் – இவ்விடயத்தில் பொறுப்பாக்கப்பட்டு இருந்தன .

இருந்த பொழுதிலும் சமகால எரிபொருள் பொருளாதார நெருக்கடி காரணமாக வழமைபோல சீராக குடிதண்ணீர் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இருந்த பொழுதிலும் இதனை இயன்றவரை செவ்வனே நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட் அடியார்கள் நேற்று முந்தினம் இரவு சன்னியாசி மலையடி வாரத்திலேயே தங்கி இருந்த பொழுது அங்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அதன் தலைவர் எஸ். ஜெயராசா கவலையுடன் தெரிவித்தார்.

அங்கு 300 அடியார்கள் இருந்தனர் எனவும் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலே குடிதண்ணீரின்றி அந்த இரவைக் கழித்தனர் எனவும் சிலர் சன்னியாசி மலையில் உள்ள சுனையிலே உறைந்து போயிருந்த பச்சை நிற தண்ணீரை வடிகட்டி எடுத்து அருந்தினர் எனவும் அவர் கூறினர்.

எது எப்படி இருந்த பொழுதிலும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோர் நாளை மறுதினம் திறக்கப்படவிருக்கும் காட்டுப்பாதை ஊடாக பயணிக்கும் பாத யாத்திரிகர்களுக்கு சீரான குடிதண்ணீர் விநியோகத்தை நிச்சயப்படுத்த வேண்டும் என்று இந்து அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்றன.

# திருமலை செயலகத்தில் தயாரான தக்காளி மரக்கன்றுகள் விநியோகம்





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நாற்றுமேடையில் உற்பத்தி செய்யப்பட்ட தக்காளி கன்றுகள் நேற்று அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரமவினால் உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மாவட்ட செயலக வளாகத்தில் சேதனப் பசளைகளை பயன்படுத்தி நாற்று மேடை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவை உத்தியோகத்தர்களுக்கு வீடுகளில் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக விநியோகிக்கப்பட்டும் வருகின்றன.

மாவட்ட விவசாயப்பிரிவு இந்நாற்று மேடையைப் பராமரித்து வருகின்றது.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாயப்பணிப்பாளர் எம்.குகதாசன், திட்மிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன், சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





# கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் உகந்தை முருகனை இன்று தரிசனம்

## ஐம்பதாவது நாளைக் கடக்கிறது திருப்பயணம்

(காரைதீவ நிருபர் சகா)

யாழ் கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் இன்று புதன்கிழமை கிழக்கின் தென் கோடியில் உள்ள உகந்தை மலைமுருகன் ஆலயத்தை சென்றடைந்தார்கள். கடந்த மாதம் நான்காம் திகதி யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவினர் நேற்றுடன் 50 நாளைப் பூர்த்தி செய்தார்கள். கடந்த 50 நாள்களாக நடந்து வந்த இந்தப் பாதயாத்திரை அடியார்கள் நேற்று உகந்தை மலை முருகன் ஆலயத்தில் தரிசித்தார்கள்.

அங்கு இரண்டு நாள்கள் தங்கி இருந்து நாளை மறுதினம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காட்டுப்பாதை திறந்ததும் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள். பாதயாத்திரை குழு தலைவர் சி. ஜெயராசா தெரிவிக்கையில் கடந்த 50 நாள்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து நாங்கள் நடந்து வந்த போது எமக்கு உதவி செய்த ஒத்துழைத்த அனைத்து ஆலயங்களுக்கும் சமூக சேவையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.132 பேர் எமது குழுவில் இடம் பெறுகின்றார்கள்.

வெள்ளியன்று காட்டுப் பாதைக்குள் பிரவேசிக்கும் நாம் முருகன் அருளால் ஐந்து தினங்களில் கதிர்காமத்தை அடைந்து 29 ஆம் திகதி கொடியேற்றத் திருவிழாவிலேகலந்துகொண்டுவீடுதிரும்பஇருக்கின்றோம். அனைவருக்கும் நன்றிகள் – என்றார்.

# ராஜபக்ஷக்களின் கைக்கூலி ரணிலையும் விரட்டி அடிப்போம்!

## ஹற்றனில் நேற்றுப் போராட்டம்



'ராஜபக்ஷக்களின் கைக்கூலியான ரணிலை விரட்டியடிப்போம்'என்ற தொனிப் பொருளில் ஹற்றனில் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுசன அமைப்புகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என பெருமளவானோர் பங்கேற்றனர்.

ஹற்றன் மணிக்கூண்டுக் கோபுரத்திற்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இடைநிறுத்தாது முடிவுகட்டுவோம் மக்களை வெற்றிபெறச் செய்வோம், இடைநிறுத்தாது நிறைவுசெய்வோம் திருடர்களை விரட்டியடிப்போம், ராஜபக்ஷக்களின் கைக்கூலியான ரணிலை விரட்டியடிப்போம் என்ற பதாதைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும், மீண்டும் ஜனாதிபதியாக வரக் கூடாது என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியமையுடன், அவ்வாறு இல்லாவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் சூளுரைத்தனர்.

அத்துடன், கொழும்பு காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் இடம்பெறும்போராட்டத்துக்கு தமது முழு ஆதரவையும், மலையக மக்கள் சார்பில் வெளிப்படுத்தினர்.

# வவுனியா பாடசாலைக்குள் சைக்கிள் திருட்டு போனது!

வவுனியாசைவப்பிரகாசமகளிர்கல்லூரியின் ஆரம்ப பாடசாலை வளாகத்துக்குள் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் ஓர் இளைஞன் என சி.சி.ரி.வி. காணொலியின் மூலம் இணங்காணப்பட்டுள்ளது.

பாடசாலையின் வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கல்விசாரா உத்தியோகத்தர் ஒருவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

அந்த உத்தியோகத்தர் அலுவலகத்துக்குள் வேலையாக இருந்தபோது பாடசாலை வளாகத்துக்குள் வந்த அந்த இளைஞன் சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளார். அதற்கான சி.சி.ரி.வி. காட்சிகள் முழுமையாகக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இது தொடர்பாக வவுனியா பொலிஸில் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான திருட்டுச்சம்பவங்கள் அண்மைக் காலமாக வவுனியாவில் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை திறப்பு விழாவும் 75 ஆவது மகாசமாதி தின நிகழ்வும் சிறப்புற நடந்தது!

( காரைதீவு நிருபர் சகா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 75 ஆவது மகாசமாதி தின நிகழ்வும், அடிகளாரின் சிலை திறப்பு விழாவும் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை அவர் அவதரித்த காரைதீவில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் நிறுவப்பட்ட அடிகளாரின் மார்பளவிலான சிலையை மட்டக்களப்பு, இராம கிருஷ்ண மிஷன், உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் திரு முன்னிலை அதிதியாகக் கலந்துகொண்டு சுபவேளையில் திறந்து வைத்தார்.

சுவாமிகளின் 'வெள்ளை நிற மல்லிகையோ.. ' என்ற பாடல் இசைக்க,அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இது சுவாமி பிறந்த காரைதீவு மண்ணில் நிறுவப்படும் ஐந்தாவது சிலையாகும். இந்தச் சிலையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் வழங்கி இருந்தார்.

சிலை திறப்பு விழாவின் பின்னர், அங்கிருந்து அதிதிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரமுகர்கள் ஊர்வலமாக சுவாமி விபுலாநந்தர் மணிமண்டபத்தை அடைந்ததும், அங்கு பணி மன்றத்தின் தலைவர் வெ. ஜெயநாதன் தலைமையில் 75 ஆவது ஆண்டு மகா சமாதி தின வைபவம் ஆரம்பமாகியது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீஸன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். முன்னதாக, மணி மண்டபத்தில் சுவாமி விபுலானந்தரின் திருவுருவப் படங்கள், அதனை அன்பளிப்பு செய்த சிவனருள் பவுண்டேஷன் நிறுவன லண்டன் பிரதிநிதி டாக்டர் சிவனேசன் சார்பில் நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட செயலாளர் கே. வாமதேவனால் திறந்து வைக்கப்பட்டன.

மண்டப நிகழ்வில், கௌரவ, சிறப்பு அதிதிகளாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், திருக்கோவில் வலய பிரதி கல்வி பணிப்பாளர் சோ.ஸ்ரீர நுதன், சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சுவாமி விபுலாநந்தர் கற்கை நிலைய மாணவர்களின் கலை நிகழ்வுகள், இந்து கலாசார ஒன்றிய அறநெறிப் பாடசாலை மற்றும் முருகன் ஐக்கிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு நிகழ்வுகள், இலங்கை தொலைக்காட்சி புகழ் கல்முனை சிவாவின் விபுலகீதங்கள் சிறப்பிசை நிகழ்வு, சிறப்புரைகள், பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள் ஆகியவை இடம்பெற்றன. நிகழ்வுகளை, பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி சிறப்புரை வழங்கினார். மாவட்டத்தில் ஆன்மீக பணியாற்றி வரும் சிவனருள் பவுண்டேஷன் நிறுவன மாவட்ட செயலாளர் கே.வாமதேவன் பொன்னாடை போர்க்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். ஒட்டுமொத்த நிகழ்வையும் ஏற்பாடு செய்த பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி நன்றி தெரிவித்து உரையாற்றினார். மேலும், பாடசாலை அதிபர்கள், நற்பணி மன்ற நிறுவுநர்கள், அறங்காவலர் ஒன்றிய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# இயற்கை பசளை உற்பத்திக்கு இயந்திர தொகுதிகள் வழங்கல்







(பாறுக் ஷிஹான்)

இயற்கை பசளை உற்பத்தியை ஊக்கப்படுத்தும் நோக்கில் பெரன்டினா நிறுவனத்தால் கல்முனையில் இயந்திர தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வானது கல்முனை உப பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று இடம்பெற்றது. பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் அதில் கலந்து கொண்டிருந்தார்.

மூன்று லட்சம் பெறுமதியான இந்த இயந்திர தொகுதியின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற இயற்கைப் பசளையைச் சந்தைப்படுத்தும் செயற்பாடும் இந்தநிறுவனத்தின் ஊடாகமேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் விவசாய பாடவிதான அலுவலகர் எம்.எஸ்.எம்.ஜெனித்கான், நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் பி.பிரதீபன், வியாபார அவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜெயரூபன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2022இல் வெளியிடப்பெற்றது.